விலை சதம் 10

# சுதந்திரன்
SUTANTIRAN

வ. ஆ. 2001, பங்குனி 21 உ சனி (4-4-70) முஹர்ரம் பிறை 26—புத்தகம் 24 இதழ் 4

# யூ. என். பி. யின் தலைவிதி தமிழர்களின் கையில்!

## இதை மறந்து தமிழரசுத் தலைவருடன் மோதுவேன் என்று துள்ளுகிறார் டட்லி!

### தென்னிலங்கைத் தமிழ் மக்கள் கொதிப்பு!

தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. இராசமாணிக்கதுடனும், ஏனைய தமிழரசுக்கட்சி வேட்பாளர்களுடனும் யூ. என். பி. போட்டியிடப் போவதாக பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அறிவித்துள்ளதுதமிழ்மக்களிடையே குமுறலையும் கொதிப்பையும ஏற்படுத்தியிருக்கிறது.

பிரதமரின் இந்த அறிவிப்பு யூ. என். பி. யானைதன்தலையில் தானே மண்ணை வாரிக் கொட்டிக்கொள்வது போன்ற செயலாகும் என்று தமிழ்மக்கள் கருதுகிறார்கள்.

அதேவேளையில் கல்முனை, நிந்தவூர், பொத்துவில் போன்ற தொகுதிகளில் போட்டியிடவிருக்கும் யூ. என். பி. வேட்பாளர்களுக்கும் பிரதமரின் அறிவிப்பு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக அறியப்படுகிறது.

யூ. என். பி. தனது கடந்த கால அரசியல் படிப்பினையை அகற்குள் மறந்து அதந்தை பிடித்துஆடத்தொடங்கிவிட்டது. 1960ம் ஆண்டு பங்குனியில் அமைக்கப்பட்ட யூ. என். பி. அரசாங்கம், தமிழினத்தின் சில அடிப்படைக் கோரிக்கைகளை ஏறெடுத்தும் பார்க்கமுடியாது என்று திமிருடன் அறிவித்ததும் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளின் ஆதரவுடன் அந்த அரசாங்கம வீழ்த்தப்பட்டதும் தெரிந்ததே; அதைத்தொடர்ந்து நடந்த 1960 ஜூலைத் தேர்தலில் யூ. என் பி. ஆக 30 இடங்களையே கைப்பற்ற முடிந்தது. இதற்கு காரணம் தென்னிலங்கையிலுள்ள தமிழ் மக்கள் தமிழரசுக்கட்சியின் கோரிக்கையின்படி யூ. என். பி. க்கு எதிராக வாக்களித்தாகும்.

1960 ஜூலைத் தேர்தலில் இந்த அரசியல் பாடத்தை படித்த யூ. என். பி. தமிழ் மக்களின் சக்தியை நன்முக புரிந்துகொண்டது. அதனுல் தான் யூ. என். பி. யால் 1965ம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறவும் முடிந்தது.

கொழும்பு தெற்கு, கொழும்பு வடக்கு, கொழும்பு மத்தி, நீர்கொழும்பு, சிலாபம் போன்ற பகுதிகளில் பொது தேர்தல் முடிவை நிர்ணயிக்கும் அளவு தமிழர் வாக்குகள் கணிசமாக இருக்கின்றன. மலையகத்தில் ஏறத்தாழ 15 தொகுதிகளில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் வாக்குப்பலம் தமிழர்களது கைகளில்தான்!

1965 தேர்தலில் இத்தொகுதிகளிலெல்லாம்

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழரசுக் கொடிகள் அறுக்கப்பட்டன!

## திருமலையில் பொலீஸ் வெறியாட்டம்!

திருமலை ஏப் —3

திருமலையில் பொது இடங்களிலும் தமிழரசுக்கட்சி கிளை அலுவலகங்களிலும் பட்டொளி வீசிப்பரறந்துகொண்டிருந்த தமிழசுக்கட்சியின் கொடிகளை அப்புறப்படுத்துவதிலும் அறுத்தெறிவதிலும் இன்று முழுவதும் திருமலைப் பொலிசார் தீவிரவாக ஈடுபட்டிருந்தனர், பொலிசாரின் இச்சர்வாதிகாரப் போக்கால் திருமலைத்தமிழ் மக்கள் மத்தியில் பரபரப்பும்பதட்டநிலையும்தோன்றியுள்ளது.

எவருக்கும் இடைஞ்சல் ஏற்படாது உயரமான இடத்தில் தெருக்களின் மேலாக கட்டப்பட்டிருந்த தமிழரசுக் கொடிகளையறுத் தெறிந்ததுடன் நில்லாது தமிழரசுக்கிளை அலுவலங்களுள்ளும் புகுந்து அங்கு பறந்து கொண்டிருந்த தமிழரசுக்கொடிகளையும் சர்வாதிகாரத்தனமாக பொலிசார் அப்புறப்படுத்தியாக தெரிகிறது.

பொலிசாரது கையில் சிக்காது கொடியொன்றை இளைஞர் ஒருவர் காப்பாற்ற முற்பட்டபோது அவரை தூஷணையான சிங்கள வார்த்தைகளால் பொலிஸ்காரர் ஒருவர் திட்டினாராம்.

பொலிசாரின் இச்சட்ட விரோரத நடவடிக்கை திருமலையில் இளைஞர்

(4-ம் பக்கம் பார்க்க)

நிந்தவூரில்

# ஐ. தே. க. மூக்குடையும்!

நிந்தவூர்—ஏப். 2

சுமார் 27 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட நிந்தவூர் தொகுதியின் பல பாகங்களிலும் வாழும் சுமார் 10 ஆயிரம் தமிழ் இனமக்களின் கையில்தான் நிந்தவூர் பா. உ பதவி தங்கியுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சிசார்பில் கடந்த தடவை போட்டியிட்ட ஜனுப். முஸ்தபா வெற்றி பெறக் காரணமாயிருந்தவர்கள் தமிழினமக்களே. ஆனுல் ஜனுப். முஸ்தபா தமதுபதவி காலத்தினுள் தமிழின மக்களின் ஆதரவு தேடுவதற்குப் பதிலாக வெறுப்பினையேதேடிக் கொண்டதால் இம்முறை தமிழ் இனமக்கள்முன் எந்த முகத்தோடு போவதென்று தம் சகாக்களுடன் யோசித்துக் கொண்டிருக்கிறாராம்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆலாலுக்கு இன்று வரவேற்பு!

கிளிநொச்சித் தொகுதியில் தமிழரசு வேட்பாளராகப் போட்டியிடும் திரு. மு. ஆலால சுந்திரத்துக்கு இன்று கிளிநொச்சிப் பட்டினத்தில் பொது வரவேற்பு ஒன்று அளிக்கப்படுகிறது. இவ்வரவேற்புக் கூட்டத்தில் தமிழரசுத்தலைவர்கள் அனைவரும் பசுகிறார்கள்

# தமிழ்க் கடவுள் முருகனை கார்ட்டூன் கருப்பொருளாக்கி

## சைவ மக்களை கிண்டல் செய்கிறது தினபதி!

தினபதி ஆசிரியர் சுதந்திரனில் ஆசிரியராக இருந்த போது தமக்கு கொடுக்கப்பட்டிருந்த எழுத்துச் சுதந்திரத்தை கண்டபடி பயன்படுத்தி சைவசமயத்தையும் சைவசமயத்தின் முழு முதற் கடவுளாகிய சிவபிரானையும் உமாதேவியாரையும் கீழ்த்தரமாகத் தாக்கி கேள்வியொன்றுக்கு பதில் கொடுத்திருந்ததும்' இதனுல் சைவப் பெருமக்களின் மனத்தைப் புண்படுத்தி தமிழரசுக்கட்சிக்கும் சுதந்திரனுக்கும் ஒரு வடுவைஏற்படுத்தியதும் அமரர் வன்னியசிங்கம் தமது விளக்கத்தால் அந்த வடுவை ஒருவாறு போக்கியதும் கடந்த காலத்தில் நடந்த மறக்கமுடியாத ஒரு சம்பவம்.

உமாதேவியாருக்கு முருகனுக்குபின் குழந்தை கிடைக்கவில்லையே ஏன் என்ற கேள்விக்கு அவர் கர்ப்பத் தடை செய்துகொண்டதாக ஈனத்தனமான பதிலை தந்து சைவமக்களின் மனதை புண்படுத்தியவர் அப்போதைய சுதந்திரன் ஆசிரியர்—இன்றைய தினபதி ஆசிரியர்.


இப்படிப்பட்ட ''சைவபக்தர்தான்'' சுதந்திரன் நாளேட்டின் முதல்நாள் ஆசிரியத் தலையங்கத்தில் நாம் குறிப்பிட்டிருந்த ஒரு பகுதியை எடுத்து 'விழல்சனம்' செய்திருக்கிறார் — அதுவும் கார்ட்டூன் படம்போட்டு!

''வெட்ட வெட்ட தழைத்தன சூரபன்மனது அவயவங்கள்; அதுபோல் ஆட்சியாளரும் சூழ்ச்சியாளரும் எவ்வளவோ தொல்லைகளை தந்தும் எம்மை அசைத்து விடமுடியவில்லை; அழித்து விடமுடியவிலலை'' என்று நாம் குறிப்பிட்டிருந்ததை 'நக்கல்' செய்திருக்கிறது சோற்றுலடித்த இந்தப்பிண்டம்!

நாம் அந்த உவமைமூலம் சுட்டிக்காட்ட விழைந்ததென்ன? உலகெலாம் படைத்துக்காத்து அழிக்கும் ஆதி முதல்வனுன இறைவனுலேயே சூரபத்மனை அழித்து விடமுடியவில்லை; அதுபோலவே கடவுளே எதிர்த்தாலும் சுதந்திரனின் கருத்துக்களுக்கு வாய்ப்பூட்டு போடமுடியாதென்பலதத் தான். இதை உணரமுடியாமல் ஈழத்தமிழினத்தின் தந்தையாம் செல்வாவை இழுத்து 'கார்டூன்' போடும் கயமைத்தனத் தினபதியே! உன் ஜம்பம் தமிழ் மக்களிடம் ஒருபோதும் பலிக்காது!

(4ம் பக்கம் பார்க்க)

## எட்டப்பர் குலத்தை நடுங்கவைத்த எம்மவர் ஊர்வலத்தைகாணீர்!



மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணியின் மாநாட்டின் மூன்றும் நாள் நிகழ்ச்சியின் போது தன்மானம் காத்த தமிழரசுக்கட்சியின் தனிப்பெரும் சின்னமான வீடு உருவில் அலங்கரிக்கப்பட்ட உழவுயந்திரத்தில் தமிழரசுத் தலைவர்கள் மட்டுநகர் வீதிவழியே ஊர்வலமாக அழைத்து வரப்படும் சீரிய காட்சி!

## பொன்னர் மொழிகள்!

'அம்பாறை திருகோணமலை, கந்தளாய்ப் பகுதிகளில் மூன்னுள் அரசாங்கங்கள் சிங்களக் குடியேற்ற வாசிகளை குடியேற்றியது. இன்று அம்பாறை தமிழ் பகுதியல்ல. அடுத்த பொதுத் தேர்தலில் திருகோணமலைக்கு சிங்களவர் பிரதிநிதித்துவம் வகிப்பாரென்ற அபாயம் எதிர் நோக்கப்படுகிறது'

—ஜீ. ஜீ. (தினகரன் 19-3-70)

'காணி அபிவிருத்திச் சட்டப்படி ஒகு பிரதேசத்தில் உள்ள காணியை பகிர்ந்தளிக்கும் போது அப்பகுதி மக்களுக்கு முதலிடம் அளிக்க வேண்டும் என்று இருக்கிறது. இதை தெரிந்திருந்தும் கூட தமிழரசு வாதிகள் வடக்கிலும் கிழக்கிலும் ஒரு சிங்களவர்கூட குடியிருக்கலாது எனக்கூச்சல் போடுகிறார்கள்'.

— ஜீ.ஜீ. (வீரகேசரி 2-4-70)

# எண்ணம்

## பொன்னரின் புரட்டு—1

# "ஏதோ" உண்மையாம்!

# இவரும் ஒரு தமிழரா?

தன்மானத் தமிழ் மகனே!

தரணியெலாம் புகழ் மணக்க தமிழ் கொண்டு தனியரசு நடத்திய பெருமை மிகு இனத்தவனே!

தமிழரசைக் காத்திட கடைசிவரை போரிட்ட சங்கிலியன் பரம்பரையே! வளமார் வடக்கும், கிழக்கும் எமக்குரிய தாயகம் என உரிமைக்குரலெழுப்பும் சிங்கத் தமிழ் மகனே!

அடிமை வாழ்வு வேண்டாம்; ஆளும் உரிமைவேண்டுமென குரல் கொடுக்கும் எம்மினத்தின் இளைஞர் படையே!

உன்னைத்தான் அழைக்கிறோம்!

உரிமையோடு அழைக்கிறோம்!

உன் இனத்தின் மத்தியில் உலவும் ஐந்தாம்படையான தமிழ் காங்கிரசின் தனிப்பெருந்தலைவர் (2-4-70 வீரகேசரி மூலம்) விடுத்திருக்கும் பேடித்தனமான அறிக்கையை படித்தாயா?

ஈழத் தமிழினத்தின் தன் மானத்துக்கு ஆழக்குழிதோண்டும் கருத்துக்களல்லவா அந்த அறிக்கையில் காணப்படுகின்றன?

பொன்னம்பலத்தின் கருத்துக்கள் கண்டு தமிழினம் முழுவதுமே வெட்கமடைகிறது, வேதனையடைகிறது, இப்படியும் ஒருவனை பெற்றேனே நான் என்று வேதனையடைகிறாள் தமிழ்த்தாய்.

என்ன சொல்லியிருக்கிறார் திரு. பொன்னம்பலம்? இதோ அவரது திருவாய் மொழிகளை ஒவ்வொன்றாக அலசுவோம்:—

★ "வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் பெருந்திரளாக வாழ்வது 'ஏதோ' உண்மைதான்" இவ்வாறு கூறியிருக்கிறார் பொன்னம்பலம்.

வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழ்வது 'ஏதோ' உண்மையா? நூற்றுக்கு நூறு உண்மையா? வடக்கும் கிழக்கும் தமிழர்களது தாயகம்-பாரம்பரிய பிரதேசம் என்று அழுத்தமாக கூறுவதற்கு கூட தமிழ் காங்கிரஸ் தலைவரிடம் திராணியும் உறுதியும் இல்லையா? இப்படிக் கூறுவதற்கு அஞ்சும் காரணமும் சிங்களவர் கோபித்துக் கொள்வார்கள் என்பதுதானா? சிங்களவர்களின் பகையைத் தேடக்கூடாதென்பதற்காக தமிழர்களின் பாரம்பரியத் தாயகமான இவ்விருமாகணங்களையும் சிங்களவர்களுக்கே தாரை வார்த்து விடுவது என்று திரு. பொன்னம்பலம் முடிவுசெய்து விட்டாரா?

இவ்விரு மாகாணங்களிலும் பெரும்பான்மையாக வாழும் தமிழ் பேசும் மக்களை சிறுபான்மையிராக்கி, தமிழினத்தை அழித்துவிடும் நோக்கத்துடன்தானே அப்பன் சேனநாயகாவும் மகன் சேனநாயகாவும் கல்லோயாவிலும், அல்லையிலும், திருமலையிலும், பதவியாவிலும், கந்தளாயிலும் மூதூரிலும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களை 1948—1955ம் ஆண்டுகளுக்கிடையே நடத்தி முடித்தனர்? அமைச்சர் பதவியில் அப்போது ஒட்டியிருந்து தமிழ் பேசும் மக்களின் தாயகத்தில் பிற இனத்தவரைக் குடியேற்றி தமிழர் நாட்டை அபகரித்த சதித்திட்டத்துக்கு உதவியாக இருந்து ஒத்துழைத்தவரல்லவா பொன்னம்பலம்?

அப்படிப்பட்டவர் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் 'ஏதோ' பெரும்பான்மையினராக வாழ்வதாக அலட்சியபோக்கில் கூறியிருப்பது கண்டு யாரும் ஆச்சரியப்படவேண்டிய அவசியமில்லை.

தமிழ் பேசும் மக்களுக்கென தனித்த ஒரு பிரதேசம் - ஒரு தாயகம் இந்நாட்டில் கிடையாது; இருப்பதையும் இல்லாதொழிக்க வேண்டும் என்று சிங்கள வெறிபிடித்து பிதற்றும் பசநாயகா ஆர். ஜீ. சேனநாயகா போன்றவர்களுக்கு 'கோபம்' வரக்கூடாது என்பதற்காக பதுங்கிப் பயந்துதான் திரு. பொன்னம்பலம் 'ஏதோ' என்று பட்டும்படாமலும் அலட்சியமாக கூறியிருக்கிறாரா!

வடக்கும் கிழக்கும் தமிழ்பேசும் மக்களுக்கேயுரிய தாயகம் என்று ஆணித்தரமாக எடுத்துரைப்பதற்கு அஞ்சும் இவரும் ஒரு தமிழ் தலைவரா? வெட்கம்! வெட்கம்! தமிழினத்துக்கே வெட்கம்!

# என்றும் எங்கள் கொள்கை தமிழரசே எங்கும் எங்கள் கொள்கை தமிழரசே

## வெத்திலைக் கேணிப் பிரசாரக் கூட்டத்தில் கிளிநொச்சி வேட்பாளர் ஆலாலசுந்தரம் விளக்கம்

கிளிநொச்சித் தொகுதியில் தமிழரசு வேட்பாளனாக நான் இம்முறை போட்டியிடுகின்றேன், 1965ல் திரு. கா. பொ. இரத்தினம் போட்டியிட்டு அமோகவாக்குகளால் காங்கிரஸ் வேட்பாளரான திரு. வீ. குமாரசாமியையும், கூட்டாட்சி வேட்பாளரான வீ. ஆனந்த சங்கரியையும் தோற்கடித்தார்.

1960 ஆடித்தேர்தலில் சமசமாஜக் கட்சி வேட்பாளரான திரு. ஆனந்த சங்கரியை தமிழரசுக் கட்சி நேரடிப் போட்டியில் தோற்கடித்தது. 1960 பங்குனித் தேர்தலில் சுயேட்சை அபேட்சகரையும் தோற்கடித்து ஆனந்த சங்கரி தனது கட்டுப்பணத்தையும் பெற முடியாமல் நீங்கள் தமிழரசுக் கட்சிக்கே வாக்களித்தீர்கள். 1956ல் அரை மந்திரி குமரசாமியைத் தோற்கடித்தீர்கள்.

இத்தனை வீரம் மிக்க, தமிழரசின் கொள்கைகளில் உரமுள்ள, தியாகத்துக்கு பெயர் பெற்ற, இலட்சியப் பற்றுள்ள, விடுதலைக்காக உழைக்கின்ற உங்கள் மத்தியில் நான் தமிழரசுக் கட்சியின் இலட்சியங்களையும், கொள்கைகளையும் பேசுவது கம்மாளன் தெருவில் ஊசிவிற்ற கதை போன்றதாகும்.

இன்று காங்கிரஸ் கட்சியில் போட்டியிடுகின்ற திரு. ஆனந்த சங்கரி அவர்கள் என்ன கொள்கையில் போட்டியிடுகின்றார்? கடந்த தேர்தலில் அவர் கொள்கை என்ன? கடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சிகளின் கொள்கைகளைக் கண்டித்துப் பேசினார். இன்று அதே கட்சியின் கொள்கைகளை ஆதரித்துப் பேசுவதைப் பார்க்கும் போது அவர்களது இலட்சியங்களை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

எனவே தான் இலட்சியமற்றவர்களை நீங்கள் ஆதரிப்பதில் தமிழ் மக்களுக்கோ தமிழ் மண்ணுக்கோ பிரயோசனமில்லை என்பதை அறிவீர்கள்,

வவுனியாத் தொகுதியில் மீன் பிடிக்கரையான முல்லைத்தீவுப் பகுதியில் நடைபெற்ற சிங்கள மீனவர் குடியேற்றத்திட்டம் போன்ற எதையும் இதுவரை மன்னாரிலிருந்து வடக்கேயும், பருத்தித்துறையிலிருந்து திருக்கோவில் வரையும் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதித்துவம் வகிக்கும் தொகுதிகளில் குடியேற்ற விடாது காப்பாற்றி வைத்திருக்கின்றோம். விவசாயம் என்ற போர்வையில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றமாக 1956க்குப்பின் அரசாங்கம் குடியேற்றவில்லை. எமது தலைவர் செல்வநாயகம் அவர்கள் பண்டாரநாயக்கா அவர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தினால் எமது நிலம் பாதுகாக்கப் பட்டிருக்கின்றது.

இராணுவத்தின் கொடுமைகளையும் தொல்லைகளையும் நாம் நன்கு அறிகின்றோம். இன்று இக்கூட்டத்தின் தலைவராக இருக்கின்ற பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. க,



துரைரெத்தினம் அவர்களை நீங்கள் நன்கு அறிவீர்கள். அவருக்கும் அண்மையில் இராணுவதினர் அடித்திருக்கின்றார்கள். இது நியாய மற்றது; தேவையில்லாதது. இதை எத்தனையோ தடவை நாம் பிரதமர் உட்பட அமைச்சர்களுக்குத் தெரிவித்தோம் இந்தத் தேசியம் பேசுகின்ற அரசினர் எமக்கு ஏதாவது நன்மை செய்வார்கள் என நாம் எதிர்பார்க்கவில்லை!.

1956-ல் எமது தலைவர்களை சிங்களக் காடையர்கள் அடித்து நொறுக்கியபோது, சும்மா பார்த்துக் கொண்டும் 1958 வகுப்புக் கலவரத்தில் தமிழர்கள் கண்ணீர் வடித்து உடமைகளை இழந்து, அநாதைகளாக கப்பலிலில் யாழ்ப்பாணம் வந்திறங்கியதைப் பார்த்துக் கொண்டிருந்த பிரதமர் புத்தகுருவாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

1961-ம் ஆண்டு இராணுவத்தால் ஆட்சிபுரிந்த சிறிமா அரசாங்கம் 1965-ல் இல்லை. எனவே இன்று இராணுவத்தினரின் கொடுமைகளை வரவேற்பவர்கள் அதாலேயே அழிவார்கள்.

1960-ல் உரிமைகளா? தரமாட்டோம் என்ற டட்லி சேனநாயக்க 1965-ல் தமிழரசுக் கட்சியுடன் ஒப்பந்தம் எழுதினார். எனவே எமது கொள்கைகள் என்றும் நிலையாக நிற்பதைப் பாருங்கள், தியாக சுத்தியினாலும், உரிமையைப் பெறும்வரை போராடுவோம் என்ற நெஞ்சுரத்தாலும் இன்று வரை இலங்கையில் மதிப்பு மிக்க தலைவர்களாக எமது தலைவர்களும், மதிப்புமிக்க கட்சியாக தமிழரசுக் கட்சியும் பெருமை பெற்று ஒரே கொள்கையில் அன்றும் இன்றும், இருந்து வருகின்றது.

இந்த நாட்டின் சரித்திரத்தை, குடியியலை படிக்கின்ற சரித்திர மாணவர்கள் நீங்கள் போராடிய வரலாற்றைப் படிப்பார்கள். உங்கள் தொகுதியில் எட்டப்பர்கள் காட்டிக கொடுத்தவர்கள் நிராகரிக்கப்பட்ட நிகழ்ச்சியைப் புரிந்து கொள்ளுவார்கள். இலட்சியப் பற்றோடு வாழுகின்ற 'விவசாயத்தையும், கடற் தொழிலையும்,' மிக முக்கியமான தொழிலாகக் கொண்டு, தன் நம்பிக்கை நிறைந்த உழைப்பாளிகள் வாழுகின்ற இத் தொகுதியின் பெருமையை தொடர்ந்து எந்நாளும் காப்பாற்றுவீர்கள் என நம்புகின்றேன்

இலங்கைத் தமிழர் விடுதலைப் போராட்டத்தில் உங்களோடு சேர்ந்து நானும் என் பங்கையும் உழைப்பையும் செலுத்துவதற்கு எனக்கும் ஒரு சந்தர்ப்பம் தருமாறும் உங்களில் ஒருவராக நானும் உங்களோடு வாழ்வதற்கு ஒத்தாசை தருமாறு வேண்டுகின்றேன்.

வாழ்க தமிழரசு.

## தெல்லிப்பளை தமிழரசுக் கிளை 6வது ஆண்டு விழா

மாவிட்டபுரம், ஏப் 1

தெல்லிப்பழை தமிழரசு கிளையின் 6வது ஆண்டு மாநாடு அடுத்தவாரம் மிகவும் கோலா கலமாக நடத்தப்பட இருக்கிறது.

தெல்லிப்பழை தமிழரசுக் கட்சி கிளையின் 6வது ஆண்டு மாநாட்டை மிகவும் சிறந்த முறையிலும் பிரம்மாண்டமான முறையிலும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

ஆண்டு விழாவையொட்டி பிரமாண்டமான நான்கு ஊர்வலங்கள் நடத்தப்பட இருக்கின்றன.

அளவெட்டியில் இருந்து ஆரம்பமாகி அம்பனை மகாஜன வீதி யூடாக ஒரு ஊர்வலமும், மலலாகம் சந்தியில் ஆரம்பித்து பிரதான வீதி யூடாக ஒரு ஊர்வலமும், காங்கேசன்துறை சந்தியில் இருந்து ஒரு ஊர்வலமும் கட்டுவான் சந்தியில் இருந்து ஒரு ஊர்வலமும் நடத்தப்பட இருக்கின்றன.

## தேர்தல் வேலைகள் ஏற்பாடு பூர்த்தி!

(வேலணை நிருபர்)

தேர்தல் அலுவல்களைச் செய்தற்கு ஊர்காவற்றுறைத் தொகுதித் தமிழரசுக்கட்சி மாவட்டசபை திரு கா. பொ. இரத்தினம் அவர்கள் இல்லத்தில் கூடிப் பல திட்டங்களை வகுத்துள்ளது. நாற்பத்தைந்து கிளைகள். வாலிப முன்னணிகளின் பிரதிநிதிகள் இக்கூட்டத்திற் கலந்து கொண்டனர்.

வேட்பாளர் நியமனத் திகதிக்கு முன் திரு. இரத்தினம் அவர்களின் தேர்தல் சுற்றுப் பயணத் திட்டம் அமைக்கப்பட்டது. நியமனப் பத்திரம் கொடுக்கும் 23-4-70 இலன்று ஆதரவாளர்கள் சந்திப்பது பற்றியும் ஒழுங்குகள் செய்யப்பட்டன.

திரு. இரத்தினம் அவர்கள் தேர்தற் கட்டுப்பணத்தை மண்டைதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, ஊர்காவற்றுறைக் கிளைகள் கட்டுவதற்கு முன் வந்தன.

திரு.க. திருநாவுக்கரசு திரு ச. அருமைநாதர் திரு. ச. தட்சணாமூர்த்தி, திரு. ச. குணசிங்கம் முதலிய பலர் உரை ஆற்றினர்.

# உடுப்பிட்டித் தொகுதியில்

## கூட்டுக் கட்சிகளுக்குள் கடும் மோதல்!

## தமிழரசாருக்கு வெற்றி வாய்ப்பு

(சுன்னாகம் நிருபர்)

உடுப்பிட்டியின் மாஜி பிரதிநிதியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயலாளருமான திரு. சிவசிதம்பரம் இம்முறை மண்கவ்வுவது உண்மை என எல்லோரும் பேசிக்கொள்ளுகிறார்கள்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் இயங்கிவரும் தேசிய நாளிதழில் 'உடுப்பிட்டித் தொகுதி சமசமாஜிக்கே' எனத்தலையங்கத்கம் தீட்டி பொய்ப்பிரசாரம் ஒன்று அண்மையில் செய்யப்பட்டதை வாசகநேயர்கள் அறிவார்கள். உடனே கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் திரு. பீட்டர் கெனமன் பதில் அறிக்கை ஒன்றினால் உடுப்பிட்டியில் பொ. குமாரசுவாமிபோட்டியிடுவதைஉறுதிப் படுத்திவிட்டார். கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சமசமாஜக் கட்சிக்கும் போட்டிதவிர்க்க முடியாததாகி விட்டதனால் தமிழ் காங்கிரஸ் தலையெடுக்க முடியாத நிலைஏற்பட்டிருக்கிறது என்று மக்கள பேசிக்கொள்ளுகின்றனர். எனவே உடுப்பிட்டித் தொகுதியில் தமிழ் அரசு கட்சி அபேட்சகர் திரு. கே.

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மொழியுரிமைக்காக போராடியது எந்தக் கட்சி?

எந்தக் கட்டத்திலும், ஆட்சிபீடத்திலிருந்த கட்சி எவ்வளவு பலம் வாய்ந்ததாயிருந்த போதும், அதற்கு நெருக்கடி கொடுத்து நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கி ஒப்பந்தம் மூலம் தமிழுக்கும் அந்தஸ்து வழங்கப்பட வழி வகுத்த கட்சி எம் தமிழரசுக் கட்சியல்லாது வேறெந்தக் கட்சி?

இனத்தின் உரிமைக்காக இடுக்கண் பலவற்றை ஏற்றும் இடர் நடுவே போராடியும் வந்துள்ள கட்சி தமிழரசுக்கட்சியல்லாது வேறெந்தக் கட்சி?

சொல்லளவில் நின்றுவிடாது செயலிலும் இனத்தின் நலம் பேணிப் போராடிவரும் கட்சி தமிழரசுக் கட்சியல்லாது வேறெந்தக் கட்சி?

சிங்களத் தலைவர்களின் தலைமையைக் கொண்ட யூ. என். பி. கட்சி, சிறீலங்கா கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை சிங்களத்தோடு தமிழுக்கும் சம அந்தஸ்து என்ற தமது முன்னைய மொழிக் கொள்கையை மாற்றி நாடு பூராகவும் தனிச் சிங்களமே ஆட்சிமொழி என்று உறுதிப்படுத்திவிட்டன.

இது போலத் தமிழரசுக் கட்சியும் தனது கொள்கையைக் காற்றில் பறக்க விட்டிருந்தால் தமிழ் மொழி விசேட மசோதாதானும் இன்று உருவாகியிருக்க முடியுமா?

1956 களனியில் கூடிய ஐக்கிய தேசியக் கட்சி மாநாட்டில் தனிச் சிங்களத்தையே ஆட்சிமொழி என்று அக்கட்சி பிரகடனப் படுத்தியது. 1956க்கு முன் மொழிப் பிரச்சினை தலை தூக்கியபோது சிங்களத்துடன் தமிழுக்கும்சம அந்தஸ்து என்று கூறிய திரு. பண்டாரநாயக்கா 24 மணி நேரத்தில் தனிச் சிங்களத்தை இந்நாட்டின் ஆட்சிமொழியாகக் கொண்டு வருவேன் என்று கூறி 1956 ஆனி 5 இல் தனிச் சிங்களச் சட்டத்தை பாராளுமன்றத்திலே நிறைவேற்றினார்.

சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட்கட்சியும் நாடு பூராவும் சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்து என்ற மொழிக் கொள்கையை மாற்றி தனிச் சிங்களமே அரசாங்கமொழி என்று உறுதிப் படுத்தின. இவ்விதமான நிலையிலும் சிங்கள மக்கள் மத்தியில் பலம்வாய்ந்த சிறீ லங்கா சுதந்திரக் கட்சியையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் தமிழ் மொழிக்கான மசோதாக்களை பாராளுமன்றத்தில் கொண்டு வர வைத்தது தமிழரசுக் கட்சியல்லவா?

1957 இல் தமிழ் மொழி விசேட மசோதாவை திரு.பண்டார நாயக்கா பாராளுமன்றத்தில் கொண்டு வர வைத்தது தமிழரசுக் சட்சியல்லவா?

1960 இல் மொழி பற்றியோ தமிழ் மக்களின் உரிமை பற்றியோ எதையும் தர மறுத்த திரு. டட்லி சேனநாயக்காவை 1966 தை மாதம் பாராளுமன்றத்தில் மொழி விசேட மசோதாவை கொண்டு வர வைத்தது தமிழரசுக் கட்சியல்லவா?

(1—4—70ல் வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுப் பிரசாரக் கூட்டத்தில் திரு. செ. இராசதுரை நிகழ்த்திய உரையின் ஒரு பகுதி.)

பதுளையின் முன்னாள் பா.உ. பண்டார சொல்கிறார்:

# "தமிழரசாருக்கு கொடுத்த வாக்குறுதிகளை யூ. என். பி நிறைவேற்ற தவறிவிட்டது"

பதுளை. ஏப்ரல் 3

'ஐ. தே. கட்சி பதவிக்கு வந்ததும், தமிழர்களுக்கு அதைத்தருகிறோம், இதைத் தருகிறோம்' என்றெல்லாம் கூறி ஏமாற்றி விட்டதென்றும் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததினாலேயே தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்திலிருந்துவிலகியதென்றும், இதிலிருந்து தமிழர்கள் ஐ, தே. கட்சியினால் படுமோசமான முறையில் ஏமாற்றப் பட்டுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிற தென்றும் பதுளைத் தொகுதி சுதந்திரக் கட்சி அபேட்சகர் திரு. பி. எச். பண்டார (பதுளை முன்னாள் எம். பி.) சுதந்திரனுக்கு அளித்த விசேடப் பேட்டியின்போது தெரிவித்தார்.

'பதுளையைப் பொறுத்தளவில் பதுளை வாழ் தமிழர்களுக்கெல்லாம்பெரிய இற்றுப்போன கயிறு கொடுத்து விட்டது ஐ.தே. கட்சி, இனத்துவேஷத்தை அழிக்கிறோம், ஒழிக்கிறோம் என்று மேலே பிரச்சாரம் செய்து கொண்டு தமிழர்களைப் படு குழியில் தள்ளி விட்டது ஐ.தே. கட்சி அதன் ஆட்சியில் தமிழர்களுக்கு கிடைத்தது தான் என்ன? இப்படிக் கூறினார் திரு. பண்டார.

'பதுளையில் ஆயிரமாயிரம் தமிழர்கள் வசிக்கிறார்கள், அவர்கள் குறையை எடுத்துக் கூறி அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்க பதுளை மாநகரசபையில் ஒரு தமிழ் அங்கத்தவர் கூட இல்லை. எனவே பல காலத்திற்குப் பிறகு அண்மையில் நடந்த பதுளை மாநகரசபைத் தேர்தலில் இருந்திருந்து 3 தமிழர்கள் போட்டியிட முன்வந்தார்கள். அவர்களுக்கு ஐ. தே. கட்சி செய்தது என்ன. என்று கேட்ட திரு. பண்டார, அந்த தமிழ் அபேட்சகர்களுக்கு ஐ. தே. கட்சி ஒரு தேர்தல் டிக்கட்டாவது கொடுக்க முன்வந்ததா? முன்வரா விட்டாலும் பரவாயில்லை. தடுக்காமலேனும் இருந்திருக்கலாம் என்றார் அவர். போட்டியிட முயன்றவர்களைத்தடுக்கஅக்கட்சிபிரமுகர்கள் சிலர் இல்லாத தில்லு முல்லு வேலைகளையெல்லாம் செய்தார்கள். ஆனால் துவேசக்கட்சி, துவேசக்கட்சி என்று கூறப்படுகின்ற சுதந்திர கட்சி தான் தமிழர்களுக்கு கைகொடுக்க முன் வந்தது. சுதந்திரகட்சி தமிழ் அபேட்சகர்களுக்கு தனது முழு ஆதரவையும கொடுத்து அவர்களுக்காக பகிரங்கமாகவீதியில் இறங்கி வேலையும் செய்தது. ஒரு தமிழன் கூட மாநகர சபைக்கு வரக் கூடாது என்ற எண்ணம்தான் ஐ, தே. கட்சிக்கு, இப்படி கூறினார் திரு: பண்டார.

தொடர்ந்து அவர் கூறியதாவது. 'நானோ எமது கட்சியோ தமிழர்களுக்குவிரோதமானதல்ல. தமிழர்கள் எமது சகோதரர்கள் எதிர்வரும் தேர்தலில் தமிழ் வாக்காளர்கள் தமது பெறுமதியான வாக்குகளை தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கே உபயோகிக்க வேண்டும்.'

## திருமலைப் பிரதிநிதிகளின் மீது பயமுறுத்தல்

(திருமலை நிருபர்)

இலங்கைத் தமிழரசு வாலிபர் முன்னணியின் 12வது மாநில மாநாட்டுக்குத் திருமலையிலிருந்து ஏராளமான பார்வையாளர்களும், மாநாட்டுப் பிரதிநிதிகளும் சென்றிருந்தனர். மட்டக்களப்பிலுள்ள திருமலைத் தமிழரசு வேட்பாளர் திரு. பா. நேமிநாதனது வீட்டில் திருமலை மாநாட்டுப் பிரதிநிதிகள் 21—3—70 அன்று இரவு உணவருந்திவிட்டு திரும்புகின்ற சமயத்தில்சில குண்டர்களால் பயமுறுத்தப் பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டனர். தகுந்த நேரத்தில் நேமிநாதன் அவர்களது நடவடிக்கையால் பொலீஸாரின் உதவியுடன்மாநாட்டுப் பிரதிநிதிகள் எதுவித இடைஞ்சல்களுக்கும் உள்ளாகாமல் மாநாட்டுப் பந்தலை வந்தடைந்தனர்.

22—3—70அன்று மாமாங்கத்திலிருந்து புறப்பட்ட பகிரங்க ஊர்வலம் பெருந்திரளான மக்களுடன் பிரதான வீதி வழியே வந்து கொண்டிருந்தது. இவ்வீதியிலேயே, மட்டக்களப்பில் ஐ.தே.க. டிக்கட்டைப்பெற பகீரதப்பிரயத்தனம்செய்து அதில் தோல்வி கண்டு கொண்டு இருப்பவருமாகிய தமிழர் ஒருவரது வீடும் உள்ளது. அவரது வீட்டின் முன்னால் பல காலிகள் நின்று கொண்டுவீதிவழியேசென்று கொண்டிருந்த ஊர்வலத்தினரைப்பார்த்து நையாண்டி செய்து கொண்டிருந்த காட்சியை என்னால் அவதானிக்கக் கூடியதாக விருந்தது.

நியாயத்தையும், சேவை உணர்ச்சியையும் முன்வைத்து அரசியலில் நிலைநிற்க முடியாதவர்கள் இவ்விதமான பலாத்காரத்திலும், கேலிச் சேஷ்டைகள் மூலமும் அரசியலில் ஓர் உன்னதமான இடத்தை வகிக்க முடியுமென நினைத்திருந்தால் அது நிச்சயம் ஒரு பகற்கனவு தவிரவேறென்ன?

மாநாடு சிறப்புற நடைபெறுவதை பொறுக்க மாட்டாத இவ்விஷமிகள் அரைமணித்தியாலத்துக்கு ஒரு துண்டுப்பிரசுரத்தைவிநியோகிப்பதன் மூலமும், மாநாட்டுக்குச் செல்வோரைப் பலாத்காரத்தினால் பயமுறுத்திக் கொண்டிருந்ததன் மூலமும் மாநாட்டின் சிறப்பினைக் குறைக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை காணக்கூடியதாகஇருந்தது: என்ன இருந்தாலென்ன? நேர்மைக்கும் நியாயத்துக்கும் மக்கள் மத்தியில் ஆதரவு இல்லாமல் போய்விடுமா?

இவ்விஷமிகளின் செய்கைகளினால் மாநாடு இன்னும் ஒரு படி சிறப்பாகவே நடைபெற்றதெனக்கூறலாம்.



# செயல்வீரர் ஜெயகொடியை வெற்றிபெறச் செய்யுங்கள்!

## உடுப்பிட்டி மக்களுக்கு செல்வா வேண்டுகோள்!

உருப்பிட்டி ஏப்.—2

'திரு. ஜெயக்கொடி அவர்கள் உண்மையான தியாகி. உள்ளொன்று அறம் பொன்று பேசாத தூய உள்ளத்தினர்; செயல்விரன்; தன்னலமற்ற பணியாளன்;பதவிக்காக ஆசைப்பட்டு வேடம் போடும் அரசியல் வாதியல்ல அவர். அவரது சேவை நாட்டிற்கு தேவை. எனவே அவரையே உடுப்பிட்டித் தொகுதி மக்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்'

—இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் உடுப்பிட்டித் தொகுதி மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழரசுத் தந்தை விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:—

உடுப்பிட்டித் தொகுதி வாக்காளப் பெரியோர்களே! வணக்கம். உங்களுட்பலர் கடந்த மூன்று தேர்தல்களிலும் தமிழரசுக் கட்சியை ஆதரித்து வாக்களித்தீர்கள். தமிழரசுக் கட்சி வட்பாளர் தெரிவு செய்யப் பெருதபோதும் இத்தொகுதியில் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு படிப்படியாக அதிகரித்துக்கொண்டு வந்திருக்கின்றதென்பது மறுக்க முடியாத உண்மையாகும். அடுத்த பொதுத் தேர்தல் அண்மையில் நடக்கவிருக்கின்றது. தமிழ் மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய மிகவும் முக்கியமான தேர்தலாய் இது அமையும். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஏகோபித்து ஒரே குரலில் பேசவேண்டியது மிகவும் அவசியமாகும்.

இப் பொதுத் தேர்தலில் தமிழரசு கட்சி வேட்பாளருக்கு அமோக ஆதரவும், வெற்றியும் ஈட்டிக் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்கள் அன்புக்கும், அபிமானத்துக்கும் உரிய திரு. க. ஜெயக்கொடி அவர்களை மீண்டும் வேட்பாளராக நியமித்துள்ளோம்.

திரு. ஜெயக்கொடி அவர்களோ உண்மையான தியாகி, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத தூய உள்ளத்தன், செயல் வீரன், தன்னலமற்ற பணியாளன். பதவிக்காக ஆசைப்பட்டு வேடம் போடும் அரசியல்வாதியல்ல

திரு. ஜெயக்கொடி அவர்களுக்குத் தனிப்பட்ட கஷ்டங்கள் இருந்தும், கட்சியின் கட்டளைக்குப் பணிந்து வேட்பாளராகச் சம்மதித்திருக்கிறார் அவருக்கு அதிக கஷ்டத்தைக் கொடாது இம்முறை அவரை வெற்றியீட்டச் செய்வது உங்கள் பொறுப்பு. அதற்கேற்ற சகல உதவிகளையும் செய்யுமாறுபணிவன்புடன் வேண்டுகின்றேன்.

வாழ்க தமிழ்! வாழிய தமிழினம்!! வெல்க தமிழரசு!!!

செல்வநாயகபுரத்தில்

# நேமிநாதனுக்கு ஆதரவு!

திருக்கோணமலை ,ஏப்3

எதிர்வரும் பொதுத்தேர்தலில் திருக்கோணமலைத் தொகுதியில் போட்டியிடும் தமிழரசு வேட்பாளர் திரு. பா.நேமிநாதனையா அல்லது ஐ.தே.க. வேட்பாளர் திரு. ஆர். நவரெட்ணராசாவையா ஆதரிப்பது என்ற ஒரு ஆலோசனைக் கூட்டத்தை செல்வநாயகபுர பொதுமக்கள் செல்வநாயகபுர ஆலடிப் பிள்ளையார் கோவில் முன்றலில் அண்மையில் கூட்டியிருந்தனர்.

இக்கூட்டத்தில் செல்வநாயகபுர பொது மக்களும் வாலிபரும் பெருமளவு கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். இ. பாலேந்திரநாதன், கோமஸ், சிவஞானம் ஆகியோர் தங்கள்கருத்துக்களைத் தெரிவித்துக் காரசாரமாக விவாதித்தனர். பலருடைய கருத்துப் பரிமாறல்களுக்குப் பின்னர் சோ. சுப்பிரமணியம் என்பவர், "எதிர்வரும் பொதுத் தேர்தலில் செல்வநாயகபுர மக்களின் ஏகோபித்த ஆதரவை திரு. நேமிநாதனுக்கே அளிக்க வேண்டும்" என்ருெரு பிரேரணையை முன்மொழிந்தார். இப்பிரேரணையை த. தில்லைநாதன் என்பவர் வழிமொழிந்தார்.

இப்பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஆதரவாக 71 வாக்குகளும் (அதாவது நேமிநாதனை ஆதரித்து) எதிராக 4 வாக்குகளும் (அதாவது நவரெட்ணராசாவை ஆதரித்து)நடுநிலைமையில் 2 வாக்குகளும் கிடைத்தன.

இவ்வாக்கெடுப்பினைத் தொடர்ந்துநேமிநாதனுக்கு ஆதரவான தேர்தல் வேலைகளைக் கவனிப்பதற்கு என்று உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது. தலைவராக சி. ஜீவராசாவும், செயலாள

(4ம் பக்கம் பார்க்க)

சுதந்திரன்
SUTANTIRAN

- தமிழ் மொழியுரிமை நிலைநாட்டப்பட்டது!
- சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட்டது!
- சிங்கள ஆசிரியர் நியமனம் தடுக்கப்பட்டது!

# "யூ. என். பி. யை மண்டியிடச் செய்து சமஷ்டிக் கட்சி வெற்றியீட்டிவிட்டது" சன் ஏட்டின் குமுறல்!

**தமிழ் மொழியுரிமையை மீண்டும் பெறுவதிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்களையும் எழுதுவினைஞர்களையும் அனுப்பவிடாது தடுப்பதிலும், சிங்களக் குடியேற்றத்தை முற்றாகத் தடை செய்வதிலும் சமஷ்டிக்கட்சி வெற்றிபெற்று விட்டது. யூ. என். பி. யுடன் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தத்திலுள்ள மூன்று அம்சங்களில் இது இரண்டையும் சமஷ்டிக் கட்சி பெற்றுவிட்டது"**

இவ்வாறு தினபதியின் சகோதர ஏடான 'சன்' (3.4.70) எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்தலையங்கம் மேலும் கூறுவதாவது;

ஐந்தாண்டுகளுக்கு யூ. என். பி. யைப் பதவியில் வைத்திருந்ததற்கு காரணம் தானே யென்று சமஷ்டிக் கட்சி யாழ்ப்பாணத்தில் உரிமை கொண்டாடியிருக்கிறது.

ஆனால் உண்மை யென்னவென்றால், பெரும்பான்மை இனத்தின் உரிமைகளை விலைபேசி, தேசிய அரசாங்கம் சமஷ்டிக் கட்சியிடம் மண்டியிட்டு வந்திருக்கிறது.

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட நாளிலிருந்து திரு. செல்வநாயகத்துக்கும் சேனநாயகாவுக்கும் இரகசிய ஒப்பந்தம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறதென்றும், யூ. என். பியுடன் சமஷ்டிக்கட்சி சேரும் பட்சத்தில் அதை அமுல் நடத்தும் என்றும் எதிர்கட்சியினர் கூறி வந்திருக்கிறார்கள்.

முதலாவது தமிழ் மொழியைப் பாதுகாப்பது. தமிழ் மொழி விசேட விதிகள் சட்டம் நிறைவேற்றப் பட்டதாலும் சிங்களத்தில் தேர்ச்சி பெறுவதற்குரிய கால எல்லை தமிழ் ஊழியர்களுக்கு நீடிக்கப்பட்டதாலும் இது நிறைவேற்றப் பட்டுவிட்டது. அத்துடன் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்களையும் சிங்கள எழுது வினைஞர்களையும் அனுப்புவது முற்றாக தடுத்து நிறுத்தப் பட்டது.

இரண்டாவது,— அதிகப்படியான அதிகாரங்களுடன் கூடிய மாவட்ட சபைகள் மசோதாவை பிரதமர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இது நிறைவேற்றப் பட்டிருப்பின் சமஷ்டி ஆட்சிக்கு வழி திறக்கப்பட்டிருக்கும். நாட்டில் எழுந்த எதிர்ப்பு காரணமாகவே பிரதமர் இதைக்கைவிட நேர்ந்தது.

மூன்றாவது— தமிழ் பேசும் மக்களின் பரம்பரைத் தாயகம் என்று சமஷ்டிக் கட்சி உரிமை கொண்டாடும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்படவேண்டுமென்ற சமஷ்டிக் கோரிக்கை பரிபூரணமாக ஒற்றுக் கொள்ளப்பட்டது.

இதன் காரணமாக வளங்கொழிக்கும் திருமலை, பதவியா, வவுனியா போன்ற இடங்களில் சிங்களக் குடியேற்றம் எதுவும் நடை பெறவில்லை— கல்லோயா திட்டத்திலுள்ள குடியேற்ற விஸ்தரிப்பு திட்டங்களும் கைவிடப்பட்டன. தமிழரசுக் கட்சிக்கும் தமக்கும் ஒப்பந்தம் ஏதுமில்லையென்று பிரதமர் ஆரம்பத்தில் மறுதலித்தார். ஆனால் காலம் செல்ல செல்ல சமஷ்டிக் கட்சி இரகசிய ஒப்பந்த விதிகளை ஒவ்வொன்றாக வெளியிடத் தொடங்கியது. இதை அரசாங்கம் 'மறுக்க முடியவில்லை" — இவ்வாறு 'சன்' எழுதியுள்ளது.

## கேட்கிறேன் ஒரு கேள்வி

தந்தை செல்வாவை நிந்தை செய்யும் விந்தைப் பிறவிகளே! சிங்கத்தின் ஓர்மையும் செங்கோலின் நேர்மையும் ஒருங்கிணைந்த தங்கத் தமிழ் ஈழத்தலைவன் எங்கள் தந்தை செல்வாவுக்கு இணையான வேறொரு தலைவன் உலகத்தில் எங்கே உள்ளான் —எடுத்துக் கூறுங்கள்!

உலகம் போற்றிய உத்தமர் காந்திகூட இந்திய மக்களை நசுக்கிய ஆங்கிலேயரின் தேசமான இங்கிலாந்துக்கு தன் தொண்டர்களை அழைத்துச் சென்று அவர்களை வெறிபிடித்த ஆங்கிலேயருக்கு மத்தியில் சத்தியாகிரகத்தில் ஈடுபடுத்தியதில்லை!

உலகத்தமிழர் அனைவரினதும் ஒப்பற்ற மாபெரும் தலைவனான எங்கள் அறிஞர் அண்ணா கூட தமிழ் நாட்டை நசுக்கிய வட இந்தியாவுக்கு தன் தொண்டர்களை அழைத்துச் சென்று இந்தி வெறியருக்கு மத்தியில் அவர்களை சத்தியாகிரகத்தில் ஈடுபடுத்தியதில்லை!

தந்தை செல்வா ஒருவர் தான் ஈழத்தமிழரை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் சிங்களவர் நிறைந்த பிரதேசமான கொழும்பு நகருக்கு தன் தொண்டர்களைத் துணிச்சலாக அழைத்துச் சென்று அவர்களை வெறிபிடித்த சிங்களக் குண்டர்கள் மத்தியில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுத்தினார்!

காலிமுகப் பசுந்திடலில் அன்று கோலத் தமிழனின் பச்சைக் குருதி ஓட காடைச் சிங்களவன் எத்தனை கொடுமைகள் இழைத்தான்!

அடிபட்டவர் எத்தனை பேர்! உதைபட்டவர் எத்தனை பேர்! அந்தரத்தில் தூக்கி வீசி எறியப்பட்ட வீரர் எத்தனை பேர்!

மாற்றானின் கோட்டையுள்ளே நுழைந்து அன்று தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் செல்வா தலைமையில் நிகழ்த்திய அந்த மகத்தான விடுதலைப் போர் ஒரு வரலாற்று நிகழ்ச்சி அல்லவா?

தந்தை செல்வா ஒரு வரலாற்றுத் தலைவன் அல்லவா?

செல்வாவைக் கிண்டல் செய்யும் சின்னப் பிறவிகளே! போக்கற்றுப் புலம்பும் உங்கள் நாக்கு அழுகிப் போகாதா?

எழில் தமிழ் ஆளர்
செ. இராசதுரை.

## யூ என்.பி. தலை...

(1-ம் பக்க தொடர்ச்சி)

தமிழ் மக்கள் ஒரே முகமாக யூ. என். பி.க்கு தமது வாக்குகளை அளித்ததால்தான் அக்கட்சி தேர்தலில் வெற்றி பெற முடிந்தது.

இவற்றையெல்லாம் மறந்த யூ. என். பி. இன்று திமிர் பிடித்து தமிழரசுக் கட்சித் தலைவருக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தப் போவதாக அறிவித்திருக்கிறது. பட்டிருப்பில் தமிழரசுக் கட்சித் தலைவருக்கு எதிராக யூ. என். பி. போட்டியிடுமானால் கொழும்பிலும் மலைநாட்டிலும் தென்னிலங்கையிலுள்ள ஏனைய தொகுதிகளிலுள்ள தமிழன் எவனும் யூ. என். பி.க்கு தனது வாக்கை அளிக்க முன்வரவே மாட்டான். இது நிச்சயத்திலும் நிச்சயம்.

அப்படியானால் யூ. என். பி. யானை தன் தலையிலே மண்ணை வாரியிறைக்கப் போகிறதா? 1960 ஜூலைத் தேர்தலில் ஏற்பட்ட முடிவை 1970 மே தேர்தலிலும் சந்திக்கப்போகிறதா? அகந்தைபிடித்து அழிந்து தொலையப் போகிறதா?

இவ்வாறு கொதிப்புடன் கேட்கிறார்கள் தமிழ் மக்கள்

இதேசமயம் 7000க்கு மேற்பட்ட தமிழ் வாக்காளர்களைக் கொண்ட கல்முனை நிந்தவூர், பொத்துவில் ஆகிய தொகுதிகளில் யூ. என். பி. வேட்பாளர்களாகப் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களுக்கு பிரதமரது அறிவிப்பு கதிகலக்கத்தை அளித்திருக்கிறது. பட்டிருப்பில் தமிழரசுக் கட்சித் தலைவருக்கு எதிராக யூ. என். பி. போட்டியிடுமானால், மேற்குறிப்பிட்ட தொகுதியிலுள்ள தமிழ் வாக்குகள் ஒன்று கூட தமக்கு கிடைக்காமல் போய்விடும் என்று இவர்கள் அஞ்சுகிறார்கள்.

## நிந்தவூரின்...

1ம்- பக்கத் தொடர்ச்சி)

தேசிய அரசாங்க அமைச்சரான திரு. தகநாயக்கா கறுப்புக்கொடி காட்டி வரவேற்கப்பட்டது நிந்தவூர் தொகுதியைச்சேர்ந்த காரைதீவு தமிழ் மக்களாலயே: எனவே இம்முறை தமிழ்மக்களின் ஆதரவு ஐக்கியதேசியக் கட்சிக்குக் கிடைக்குமென்பது சந்தேகத்திற்குரியதே.

## தியாகிகளுக்குச் சிலை வேண்டும் தமிழணிச் சபை வேண்டுகோள்

"திருக்கோணமலைத் தியாகிகளான திருவாளர்கள் ஏகாம்பரம், இராசவரோதயம், நடராசன் ஆகியோருக்கு திருக்கோணமலை நகராண்மைக்கழகத் திடலில் சிலை அமைக்கவேண்டும். அதனால் நாம் அவர்களுக்கு நன்றி செய்தவர்களாவோம், இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது, இலங்கை தமிழணிச் சபையின் திருகோணமலைக்கிளை.

கடந்த நோன்மதி தினத்தன்று திருகோணமலை ஏகாம்பரம் வீதியில் அமைந்துள்ள இந்து மயானத்தில் நடைபெற்ற "ஏகாம்பரம் ஞாபகார்த்த அஞ்சலி" நிகழ்ச்சிகளின் போதே இவ்வேண்டுகோள் விடப்பட்டது.

தமிழ் இனத்துக்கும், தமிழ் மொழிக்கும் தங்களை அர்ப்பணித்து, தமிழ் உரிமைப் போராட்டத்தில் தங்களின் உயிர்களை இழந்த இத்தியாகிகளுக்கு சிலையமைக்கும் முயற்சியில் இலங்கைத் தமிழணிச் சபை ஈடுபட்டுள்ளது. இதன் முயற்சிக்கு ஆதரவு தரும் முகமாக திருகோணமலையில் உள்ள பிரபல தொழில் அதிபர்கள் முன்வர வேண்டும் என மேலும் சபை வற்புறுத்தியது:

## நேமிநாத...

(3-ம் பக்கத் தொடர்ச்சி

ராக ஆ. சண்முகநாதனும் தெரிவாகினர். சுப்ரமணியம், செல்லத்துரை, தில்லைநாதன் பரிதிவளவன், யோசெப் பீற்றர், இஸ்மாயில், நவரெட்ணம் வேதநாயகம், நோபேட் ஆகியோரைக் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது செல்வநாயகபுர இளைஞர் மன்றம் என அழைக்கப்படுகின்ற இவ்வியக்கம் திரு. நேமிநாதன் அவர்களுக்கு ஒரு பிரமாண்டமான வரவேற்பளிக்கவும் முடிவுசெய்தது.

## தமிழ் கடவுள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அன்று சுதந்திரனில் சிவபிரானையும் உமாதேவியாரையும் கீழ்த்தரமாக கிண்டல் செய்து பதில் அளித்தவர்தான் இன்று மாவிட்டபுரம் முருகனை தனது அரசியல் ஆத்திரத்தையும் எரிச்சலையும் கொட்டித்தீர்ப்பதற்காக தமது கடைகெட்ட ஏட்டில் கார்ட்டூனாக நிற்க வைத்து கேலி செய்திருக்கிறார்!

சைவப் பெருமக்களே! மாவிட்டபுர முருகன்மீது ஆழ்ந்த பக்திகொண்டுள்ள சைவ உள்ளங்களே! உங்கள் இதயதெய்வத்தை— இறைவனை—முருகனை 'கார்ட்டூனுக்கு' பயன்படுத்தி கேவலப்படுத்தியிருக்கிறார் தினபதியார். இந்த ஏட்டை நாட்டில் இனியும் உலவவிடலாமா? இன்று இந்துக்கடவுளை கேலிச்சித்திரமாக்கும் தினபதியார் நாளை யேசுநாதரையும் நபியையும், கேலிச் சித்திரமாகப் போடமாட்டாரென்பது என்ன நிச்சயம்?

## உடுப்பிட்டிதொ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயக்கொடி வெற்றிவாகை சூடுவது ஊர்ஜிதமாகியிருக்கிறது. தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொய்ப்பிரசாரம் எல்லாம் தவிடுபொடியாக்கப்பட்டுள்ளது:

யாழ்ப்பாணம் வவுனியா, உடுப்பிட்டி எல்லா இடங்களிலும் காங்கிரஸ் மண்கவ்வுவது நிச்சயம் என்று பேசிக்கொள்ளப்படுகிறது.

## தமிழரசுக் கொடிகள்......

(1ம் பக்க தொடர்சி)

கள் மத்தியில் கொதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இளைஞர்களை திரு. நேமிநாதன் கட்டுப்படுத்தி வைத்திருப்பதுடன் பொலிசாரின் இச் சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து நடவடிக்கையிலீடுபட்டுள்ளார்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரத்தால் கொழும்பு பண்டாரநாயகவீதி, 194 ஏ இல்லத்தில் 1970.ம் வருடம் ஏப்பிரல் மாதம் 4-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது
ஆசிரியர்: கோவை மகேசன்